Previous Examination Date: **9-6-16**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure
In the Court of the Judicial Magistrate, Palani.
சி.சி. 103-14

Deposition of Witness . அ.சா. 3

| | |
|---|---|
| Name: ரவிச்சந்திரன் | Father/Husband's Name: ஆறுமுகம் |
| Village: | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: |

Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 15-12-2020

**முதல் விசாரணை**

நான் தற்போது பட்டுக்கோட்டையில் வசித்து வருகிறேன். சம்பவ காலத்தில் நான் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோவிலில் உதவி மேலாளராக பணியாற்றினேன். பக்தர்கள் முடிகாணிக்கை செலுத்துவதற்காக பழனி கோவிலில் 7,8 இடங்கள் உள்ளது. முடிகள் ஆண்கள் முடி என்றும் அவை சிறியதாக இருக்கும். குழந்தைகள் முடி அது சிறிது நீளமாக இருக்கும். அதற்கு ரப்பர் என்றும், 10 இன்ஞ்க்கு மேல் உள்ள பெண்கள் முடியை முடிச்சு என்று சொல்வார்கள். ஆண்கள் முடியை தவிர்த்து மற்ற முடி வகைகளை தனித்தனியாக உள்ள உண்டியலில் முடிச்சாக சேகரிப்பார்கள். அந்த உண்டியலில் உள்ள முடிகளை மாலை 5.00 மணிக்கு மேல் போய் சேகரித்து வந்து அடிவாரம் தேவஸ்தான அலுவலகத்திற்கு எதிரில் உள் சிறுகுடில்களில் இரண்டு பூட்டு முறை உள்ள அறைகளில் பாதுகாப்பாக வைப்பார்கள். அந்த அறைக்கு முடிகளை சேகரிக்க முடி பிரிவை கவனிக்கும் கண்காணிப்பாளர் மற்றும் வேலை செய்யும் நபர்கள் சேகரித்து கொண்டு வந்து வைப்பார்கள். ஆண்கள முடி கிலோ 10 முதல் 15 ரூபாய்க்கு தான் விலை போகும். பெண்கள் முடி 10 ஆயிரம் முதல் 25 ஆயிரம் வரை ஒரு கிலோ விலை போகும். 2013-ம் வருடம் கடைசியில் எனக்கு தேதி சரியாக ஞாபகம் இல்லை. முடிகள் காணிக்கை முடிகள் காணாமல் போனதாக அலுவலகத்தில் மேலாளர், உயர்அதிகாரிகள் பேசிக்கொண்டார்கள். முடிபிரிவில் உள்ள கண்காணிப்பாளர் சொல்லித்தான் கோவில் செயல்அலுவலர் அந்த இடத்தை ஆய்வு செய்துள்ளார். ஆய்வில் சுமார் ஆயிரம் முடிச்சுகளுக்கு மேலாக காணாமல் போனதாக பேசிக்கொண்டார்கள். அதன் மதிப்பு சுமார் 15 லட்சம் இருக்கலாம். புகார் யார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னுடன் அந்த சமயத்தில் யார் யார் இருந்தார்கள்

என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அந்த வழக்கில் சூப்பரிடெண்ட் கதிரேசன், பன்னீர் செல்வம், செந்தில், செல்வராஜ், எழுத்தர் பாலசுப்பிரமணியம், ஓட்டுனர்கள் லட்சுமணன், ஆனந்தராஜ் ஆகியோரை கோவில் நிர்வாகம் சஸ்பெண்ட் செய்திருந்தது. அவர்கள் என்னுடன் வேலை செய்தவர்கள். நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரிகளில் செல்வராஜ்,ஆனந்தராஜ், லட்சுமணன் ஆகியோரை எனக்கு அடையாளம் தெரிகிறது.

1-வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

போலிசார் என்னிடம் விசாரித்தபோது என்ன சொல்லியுள்ளேன் என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் விசாரணையில் நான் கணக்கராக வேலை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால், பதவியின் பெயர் உதவி மேலாளர் செய்த வேலை கணக்கர் வேலையாகும். கணக்காளர் என்ற முறையில் எனக்கு அலுவலக பணிதான் கொடுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். முடிசேகரிக்கும் இடத்திலோ அல்லது முடியை கொண்டு வரும் இடத்திலோ சேகரித்து வைக்கும் இடத்திலோ எனக்கு பணி இல்லை என்றால் சரிதான். முடிகாணாமல் போனதாக சொல்லும் விவரம் மட்டும் தான் நான் கேள்விப்பட்டு தெரிந்து கொண்டது. மற்றபடி முடி சேகரிக்கும் விவரங்கள் அனைத்தும் எனக்கு நேரடியாகத் தெரியும். நான் 2008 முதல் 2011 வரை முடிசேகரிக்கும் பிரிவில் வேலை செய்துள்ளேன். முடிபிரிவின் கண்காணிப்பாளராக யார் இருந்தார்கள் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்பது பற்றி தற்சமயம் எனக்கு ஞாபகம் இல்லை. சிறு குடில்களில் பாதுகாப்பாக வைத்திருந்த முடிகள் காணாமல் போனதாக மட்டும் பேசிக்கொண்டார்கள் என்றால் சரிதான். செயல்அலுவலர் சிறுகுடில்களில் மட்டும்தான் ஆய்வு செய்தார் என்றால், சரிதான். முடிகள் சிறுகுடில்களில் மட்டும்தான் சேகரித்து வைக்கப்படுவதால் அங்கு மட்டும்தான் ஆய்வு செய்யமுடியும். வழக்கு விவரம் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். நான் தேவஸ்தானத்தில் வேலை செய்ததால் என்னை சாட்சியாக சேர்ந்துள்ளார்கள் என்றும், நான் வழக்கிற்கு தேவையற்ற சாட்சி என்றால் சரியல்ல.

**2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1-வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்ட்டு பதிவு செய்யப்பட்டது.**

**4 முதல் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முடிகள் எந்த தேதியில் காணாமல் போனது என்பது பற்றி எனக்குத் தெரியாது என்றால் சரிதான். நான் ஆய்விற்கு செல்லவில்லை. உயர்அதிகாரிகள் ஆய்வு செய்தபோது காணாமல் போனதாக சொன்னார்கள். ஆய்வு சம்மந்தமான ஆவணங்களை நான் பார்வையிடவில்லை என்றால் சரிதான். ஒப்பந்த பணியாளர்களாக வேலை செய்த நபர்கள் யார் யார் இந்த வழக்கில் எதிரிகளாக உள்ளார்கள். அவர்கள் எந்தெந்த இடங்களில் வேலை பார்த்தார்கள் என்ன வேலை செய்தார்கள் என்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பாதுகாப்பு பணியில் ஈடுபடும் நபர்கள் முடியை சேகரிக்கும்போது அந்த வாகனத்துடன் செல்வார்கள். திரும்ப கொண்டுவரும்வரையும். பாதுகாப்பு அறையை பாதுகாக்கும் வேலையும் செய்வார்கள். பாதுகாப்பு அறையின் கதவுகள் ,பூட்டுகள் ,ஜன்னல்கள் ஆகியவை எதுவும் உடைக்கப்பட்டதாக எனக்கு தகவல் இல்லை. பாதுகாப்பு அறையில் உள்ள பூட்டானது இரட்டை பூட்டு முறையில் உள்ளது என்றால் சரிதான். எனக்கு கிடைத்த தகவலின்படி இடும்பன்குடிலில் இருந்த முடிச்சுகள் தான் காணாமல் போயிருந்தது. ஒப்பந்த முறையில் நியமிக்கப்பட்ட பணியாளர்களுக்கு நேரடியாக தேவஸ்தானத்திலிருந்து ஊதியம் வழங்கப்படாது என்றால் சரிதான். பாதுகாப்பு அறையின் ஒருசாவி முடி பிரிவின் கண்காணிப்பாளரிடமும், மற்றொரு சாவி செயல்அலுவலருக்கு உதவி செய்யும் கண்காணிப்பாளரிடமும் இருக்கும். நான் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சம்பவம் பற்றி எதுவும் தெரியாமல் போலிசாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Previous Examination Date: **9-6-16**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure
In the Court of the Judicial Magistrate, Palani.
சி.சி. 103-14

Deposition of Witness . அ.சா. 4

Name: முத்துமாணிக்கவேல் Father/Husband's Name: சுந்தரராஜன்
Village: Taluk:
Caste: Calling:
Religion: Age:

Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 15-12-2020

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் பழனியில் வசித்து வருகிறேன். சம்பவகாலத்தில் பழனி அருள்மிகுதண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் அலுவலகத்தில் மக்கள் தொடர்பு அதிகாரியாக வேலை செய்தேன். அ.சா.3 ரவிச்சந்திரன் என்னுடன் தான் சம்பவகாலத்தில் உதவிமேலாளராக வேலை செய்தார். பழனி திருக்கோவில் சார்பாக 8 இடங்களில் முடிகாணிக்கை செலுத்தும் இடம் உள்ளது. அந்த முடிகளில் ஆண்கள் முடி, குழந்தைகள் முடி, பெண்கள் முடி என உள்ளது. பெண்கள் முடியை சடை மற்றும் முடிச்சு என வகைப்படுத்துவார்கள். முடிச்சு தான் மதிப்பு அதிகம் உடைய முடி ஆகும். 8 இடங்களிலும் சேகரிக்கபடும் முடிகள் இடும்பன் குடிலுக்கு தினமும் மாலை எடுத்துச் சொல்லப்படும். முடியை சேகரித்து எடுத்துச் செல்லும் பணியை அந்த பிரிவில் உள்ள கண்காணிப்பாளர் , எழுத்தர், பாதுகாப்பு பணியிலுள்ளவர்கள் லாரி அல்லது வேனில் எடுத்துச் செல்வார்கள். அந்த வாகனத்தில் முடிபிரிவு கண்காணிப்பாளர், எழுத்தர், பாதுகாப்பு பணியிலுள்ள நபர்கள் செல்வார்கள். அந்த முடிகளை சேகரிக்கும்போது பதிவேட்டில் பதிவு செய்வார்கள். முடிபிரிவின் கண்காணிப்பாளர் கோவில் செயல்அலுவலரிடம்முடிச்சுகள் காணாமல் போனதாக தகவல் சொன்னார். அதன்பேரில் 14-8-13-ம் தேதி செயல்அலுவலர் ஆய்வு செய்தபோது 1253 முடிச்சுகள் காணாமல் போனதாக தெரிய வந்தது. மேற்படி முடிகளின் மதிப்பு சுமார் 17 லட்சம் ஆகும். மேற்படி காணாமல் போன விவரம் பற்றி செயல்அலுவலர், உதவி ஆணையர், கணக்கு அலுவலர், முடிபிரிவு கண்காணிப்பாளர் பேசிக்கொண்டதை நான் கேட்டேன். அப்போது என்னுடன் அ.சா.3 ரவிச்சந்திரனும் இருந்தார். துணைஆணையர் வழக்கு சம்பவம் தொடர்பாக அடிவாரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். சம்பவத்தில் ஈடுபட்டதாக விஜயகுமார், செல்வராஜ் மற்றும் சிலர் ஈடுபட்டதாக சொன்னார்கள். ெல்வராஜ் மற்றும் விஜயகுமார்

நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தாகள்.

**1-வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலிசார் விசாரணை செய்தபோதும் முதல்விசாரணையில் தற்போது கூறியுள்ள விவரத்தைத்தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன். எனக்கு பழனி தண்டபாணி நிலையத்தில் வேலையாகும். செயல்அலுவலர் கூப்பிடும் இடங்களுக்கு நான் செல்வேன். நான் பி.எஸ்.சி., பட்டப்படிப்பு படித்துள்ளேன். முடியின் நீளம் மற்றும் தரத்தை வைத்து விலையை நிர்ணயிக்கும் அளவிற்கு அதில் நான் நிபுணத்துவம் பெற்றவன் அல்ல என்றால் சரிதான். அலுவலகத்தில் பேசிக்கொண்டதை வைத்து நான் சொல்கிறேன். உதவி ஆணையர், முதுநிலைகணக்கு அலுவலர் ஆகியோர் பேசிக்கொண்டார்கள். 8 இடங்களில் முடிசேகரிக்கும் இடத்திலோ, அதை கொண்டு வரும் இடத்திலோ, பாதுகாப்பாக வைக்கும் இடத்திலோ எனக்கு பணி ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் கூறியுள்ள தகவல்கள் மற்றவர்கள் பேசிக்கொண்டதன் அடிப்படையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். முடிபிரிவின் கண்காணிப்பாளரின் பெயரை நான் போலிசார் விசாரித்தபோது சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு முன்பாக செயல்அலுவலர் யார் யாரிடம் கலந்து பேசினார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. முடி களவு போனதும் புகார் கொடுத்தது மட்டும் தான் எனக்கு தெரியும்.. எந்தெந்த எதிரிகள் மீது என்னென்ன குற்றச்சாட்டுக்கள் உள்ளது என்பது பற்றி எனக்கு தெரியாது. 1-வது எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் உள்ளதா என்பது பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது. நான் வழக்கிற்கு தேவையற்ற சாட்சி என்றும் வழக்கிற்காக என்னை சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

**2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1-வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**4 முதல் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை 30-8-13-ம் தேதி அடிவாரம் காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். முடி முடிச்சுகள் காணாமல் போனது பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். சகஅதிகாரிகள் பேசிக் கொண்டதுபற்றி தான் எனக்கு சம்பவம் பற்றி தெரியும் என்றால் சரிதான். முடி முடிச்சுகள் செயல்அலுவலர் ஆய்வு செய்தபோது எந்த தேதியில் காணாமல் போனது என்று எனக்குத் தெரியாது.

எந்தெந்த தேதியில் எவ்வளவு முடிச்சுகள் காணாமல் போனது என்றும் எனக்குத் தெரியாது, சம்பவகாலத்தில் நான் முடி பிரிவில் நான் வேலை செய்யவில்லை என்றால் சரிதான். ஒப்பந்த அடிப்படையில் பாதுகாப்பு பணி செய்யும் நபர்களும் எனது கட்டுபாட்டில் வரமாட்டார்கள். முடிபாதுகாப்பு செய்யப்பட்டுள்ள அறையானது இரட்டை பூட்டுகள் கொண்டது என்றால் சரிதான். அதில் ஒருசாவி முடி பிரிவு கண்காணிப்பாளரிடமும் மற்றொரு சாவி செயல்அலுவலர் அலுவலகத்திலும் இருக்கும். முடி முடிச்சுகள் பாதுகாப்பு செய்யப்பட்ட அறைகளில் உள்ள பூட்டு ,கதவு, ஜன்னல் போன்றவை நாங்கள் ஆய்விற்கு சென்றபோதோ அதற்கு முன்போ சேதபடுத்தப்படவில்லை. காவல்நிலையத்தில் செயல்அலுவலர் புகார் கொடுத்தார். போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டார்களா என்று எனக்குத்தெரியாது. முடிகணக்கு பதிவு செய்யும் பதிவேடுகள் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதா என்ற விவரம் எனக்குத் தெரியாது. நான் ஆய்விற்கு தனியாக செல்லவில்லை. அதிகாரிகளுடன் சென்றேன். அவர்கள் ஆய்வு அறிக்கையை தயார் செய்தார்களா என்று எனக்குத் தெரியாது. சம்பவ காலத்தில் பாதுகாப்பு அறை காவல்பணியை யார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. காணாமல் போன முடிச்சுகளை எங்கு வைத்து யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் சம்பவகாலத்தில் தேவஸ்தானத்தில் பணியாற்றியதால் உயர்அதிகாரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்திற்கும் 4 முதல் 10 எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.